# கிராமியக் கல்விசார் மேம்பாட்டின் வாய்ப்புகளும் சவால்களும்: சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நவாலிக் கிராமப் பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**நிஷானி, ஜெ., பாஸ்கரன், நி.**
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
christalinnishani@gmail.com

*கல்வியானது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மேல்நோக்கிய அசைவியக்கத்திற்குத் துணை நிற்கிறது. கல்வியின் ஊடாக கிராமிய மேம்பாட்டினைச் சாத்தியமாக்குவதில் கிராமியப் பாடசாலைகளின் பங்களிப்பு இன்றியமையாததாகும். கிராமப்புறத்தில் கல்விசார் மேம்பாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படும் வாய்ப்புகள் மற்றும் அதுசார்ந்து எதிர்நோக்கப்படும் சவால்கள் என்பவற்றை இனங்காணுதலும் அச்சவால்களை வெற்றிகொள் வதற்கான பரிந்துரைகளை முன்மொழிதலை, யாழ்ப்பாணத்தின் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட நவாலிக்கிராமப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான மாதிரிகள் குடும்ப (பெற்றோரும்) மற்றும் சமுதாயமட்டம் (பாடசாலை ஆசிரியர்கள்) என்ற அடிப்படையில் அடுக்கமைந்த மாதிரி எடுப்பு* (Stratified Random Sample) *முறைமையின் அடிப்படையில் **61** மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. கலப்பு முறையில் அமைந்துள்ள இந்த ஆய்வில், முதலாம் நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளான நேரடி அவதானம், வினாக்கொத்து, நேர்காணல் என்பவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளாக சண்டிலிப்பாய் பிரதேசசெயலக தரவுகள், சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட மற்றும் வலயக்கல்வி அலுவலக அறிக்கை முன்னைய ஆய்வறிக்கைகள், புள்ளிவிபரவியல் அறிக்கைகள், இணையவழித்தரவுகள், பத்திரிகை செய்திகள், சஞ்சிகைகள் (மாதாந்த வெளியீடுகள்), நூல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டு, பெறப்பட்ட தரவுகள் கணியம்சார் மற்றும் பண்புசார் ஆய்வு வடிவங்கள் இணைந்த கலப்பு முறையின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளின் படி, கல்வியின் நவீனமயமாக்கல், நகரமயமாக்கல், உலகமயமாக்கல் மற்றும் குடிப்பெயர்வு அனுபவங்களால் பாரம்பரிய தொழில்முறைகளின் நிறுவனமயப்படுத்தப்பட்ட தன்மை, புதிய தொழில் வாய்ப்புகளின் விருத்தி, குடும்ப, திருமண உறவுமுறை மற்றும் பெற்றோரின் வகிபங்கு நிலைமைகளின் மாற்றப்போக்குகள் கிராமப்புற கல்வியில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. இருப்பினும், நகரத்துவ மனநிலைகளால் தூண்டப்பட்ட கிராமத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை தமது வீடுகளுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில்* (Nearest Schools) *இணைத்துக் கொள்வதனை விடுத்து புகழ்பெற்ற குறியீட்டு மாதிரிப் பாடசாலை என்ற அந்தஸ்தின் அடிப்படையில் நகர்ப்புறப் பாடசாலைகளில் இணைத்து விடுகின்ற போக்கினைக் காணமுடிகிறது. இதனால் கிராமப்புற மாணவர்களின் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கிய அசைவு காரணமாக கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வரும் நிலையில் அப்பாடசாலைகள் மூடப்படும் ஆபத்துநிலை காணப்படுவதுடன், மாணவர்கள் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளை இணைத்து "குழுப் பாடசாலைகளாக்கும்* (Group-Schools)' *முயற்சிகளும்*